# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிக்கை எண். த.மி.ஒ.ஆ /SC/ 7 –8,   06. 06. 2008  நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003)  50ஆம்  பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பினைக்  குறித்துரைத்து , 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட  தமிழ்நாடு அரசிதழின் பகதி VI பிரிவு 2இல்  (இணைப்பு) இல் அறிவிக்கை செய்திருப்பதாலும்,

மற்றும் அது தமிழ்நாடு மின் வழங்கல்  விதித்தொகுப்பிற்கு, பட்டியலில் குறித்த தவறுகள், உரிமம்தாரரால் திருப்பிச் செலுத்துதல் முதலியவை தொடர்பாக, திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் அத்தகைய திருத்தங்கள், முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்  மற்றும் அதற்கிணங்க முந்திய வெளயீடு ஏற்றுக் கொள்ளப்படுகிறது  என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 50ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன் மூலம்,  (இதன் பின்பு இதில் முதன்மை விதித் தொகுப்பு என்று சுட்டப்படும்) தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தத்தைக் குறித்துரைக்கிறது ,  அதாவது : -

**1.  குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்**  : -

(a) இந்த விதித் தொகுப்பு,  2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இது, தமிழ்நாடு அரசிதழில், அது வெளியிடப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வரும்.

2. முதன்மை **விதித்தொகுப்பின் 12ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்.**

முதன்மை விதித்தொகுப்பின் 12ஆம் ஒழுங்குமுறை விதியின், (2)ஆம் உள்– ஒழுங்குமுறை விதிக்குப் பதிலாக, பின்வரும் உள் – ஒழுங்குமுறை விதி அமைக்கப்பட்டுள்ளது, அதாவது :–

" (2) நுகர்வோர் மிகையாகக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதாகக் காணப்படுமிடத்து அத்தகைய நுகவோரால் செலுத்தப்பட்ட மிகைத் தொகையானது, காப்புத் தொகைக்குப் பொருந்தக் கூடிய வீதத்திலான வட்டியுடன் சேர்த்து திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும். வட்டியானது, மிகைத்தொகை செலுத்தப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும். அத்தகைய மிகைத்தொகை வட்டியுடன் மிகையாக வசூலிக்கப்பட்டது கழிக்கப்படும் பிந்திய மாதத்தில் காசோலை மூலம் செலுத்தப்படலாம் அல்லது நுகர்வோரின் தெரிவுரிமையின்படி இரண்டு கணக்கீடுகள் வரை எதிர்கால மின் நுகர்வுப் பட்டியலில் சரிக்கட்டப்படலாம். இரண்டு கணக்கீடுகளுக்குப் பின்பு, வசூலிக்கப்பட வேண்டிய தொகையானது காசோலை மூலம் செலுத்தப்படலாம். வட்டியானது, கடைசிச் செலுத்துகைத் தேதி வரையில் கணக்கிடப்படுதல் வேண்டும் . "

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி )

இரா. பாலசுப்பிரமணியன்
செயலாளர்